த[illegible]ரங்[illegible]ப் பதிற்றுப்பத்தந்தாதி.

O-,12MSC1,T
N23
85777

P. M. சண்முகம் செட்டியார்.

உ

முருகன் துணை.

திருப்பரங்கிரிப்
பதிற்றுப்பத்தந்தாதி.

இது

மதுரை ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரர் தேவஸ்தானம்
கமிட்டிமெம்பரும், மதுரை இராமநாதபுரம்
ஜில்லா போர்டு மெம்பரும், மதுரை
முனிசிபல்கவுன்சிலரும் மதுரைக்
காலேஜ் போர்டுமெம்பருமான

P. M. ஷண்முகம் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

மேற்படியாரால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1923.

உ

சிறப்புப் பாயிரம்.

மதுரைக்காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
B. B. சுப்பராமையரவர்கள் சொல்லியது.

சீரார் பரங்கிரிவாழ் செவ்வேள்மே லந்தாதி
போரார்வ மிக்கவே பேசினன்—நேராய்
தனஞ்சேர் வசிகன் தருமதுரை வாழ்வோன்
கனஞ்சேருஞ் சண்முகனே காண்.

மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகளாதீனம் வித்துவானும்
செயிண்ட்மெரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய
மு. கோவிந்தசாமி ஐயரவர்கள் இயற்றியவை.

பூமலியு மயன்முதலா வானுறையும் புத்தேளிர்
போற்றி செய்யத்
தேமலியுஞ் சரவணப்பூம் பொய்கையிடை வந்துதித்துச்
சிவனு ரேற்க
நாமலியும் பிரணவத்தின் பொருளுரைத்துச் சூர்தடிந்து
நாக மீன்ற
தூமலியுஞ் சுரயானை தனைமணந்து பரங்கிரியிற்
றுலங்குந் தேவை. (1)

புள்ளிமயில் வாகனனை யெம்மையாட் கொண்டருளும்
புனிதன் றன்னை
யுள்ளுருகித் தினமேத்தி யன்பென்னு நாரினிடை
யுரைக ளென்னுங்
கள்ளொழுகு மலர்தொடுத்துப் பதிற்றுப்பத் தந்தாதிக்
கடிமென் மாலை
தெள்ளுதமிழ் மொழியாலே புகன்றுதிரு வடிக்கணிந்தான்
சிறக்க மாதோ. (2)

அன்னவனும் யாவனெனிற் கழுநிநகர் வணிகருக்கோ
ரணியே போல
மன்னுமண்ணு மலைவணிகன் புரிந்ததவப் பயனாக
மகனு வந்தோன்

பன்னுபுகழ் தென்பொழிசை வணிகருக்குண் மணிகண்போற்
பண்பு கொண்டு
துன்னுவதான்முத்துக்கண்பெயர்படைத்தோன்குலப்பெருமை
துலக்கும் வண்ணம். (3)

வந்தவொரு மாண்புடையா னங்கிலமுங் கற்றதொடு
வளமிக் கோங்குஞ்
செந்தமிழு மெம்மிடத்தே பயின்றவனல் லறிவொழுக்கந்
திகழப் பெற்றோன்
சுந்தரமும் வந்திரப்போர்க் கில்லையென்ன தளித்துதவுந்
தகைமை வாய்ந்தோன்
இந்துநிதிப் பொறுப்பாளர் களிலொருவ னாகடத்து
மேற்ற முள்ளான். (4)

கருணைமிகு மீனுகூஷி சுந்தரர்கோ யிற்றரும
கருத்தர் தம்மி
லொருவனு மிராமநா தச்சில்லா மெம்பர்களி
லொருவ னானன்
தருமதுரை நகரபரி பாலனசங் கத்திலொரு
தானம் பெற்றோன்
பெருமைபல பெற்றவனெஞ் சண்முகனும் பெயர்படைத்தான்
பிறங்க மாதோ. (5)

மதுரைமாணவர் செந்தமிழ்ச்சங்க கிரந்த அக்கிராசனுதிபதியும்
திரிசிரபுரம் நாஷனல் காலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதரும்
விவேகோதயம் பத்திராதிபருமான

ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் சொல்லியது.

சோலைதிகழ் பார்த்திபனூர் முத்துக்கண் செட்டிதவத்
தோன்ற லாய்ப்பண்
ணூலையுணர் சண்முகமால் என்னருமா ணவகன்மதி
நட்பத் தாலே
பாலைநிகர் செந்தமிழில் யாத்தபாங் கிரிப்பதிற்றுப்
பத்தந் தாதி
மாலையைபக் கிரிபுணைசெவ் வேள்புயத்தில் அணிந்துபுகழ்
மன்னி னானே.

பேரையூர் சமஸ்தான வித்துவான் சோடசாவதானம்
மீனாக்ஷிசுந்தரக்கவிராயவர்கள் சொல்லியது.

அந்தாதி னளினமினாள் கணவனயன் வேதமுடி
யறியொ ணாத
அந்தாதி யறவுயர்ந்த பரம்பொருளே மெய்ஞ்ஞானத்
தரசே சோதி
அந்தாதி கழுநிதிதா வெனவணங்கு சண்முகவெளாய்
யார பூமன்
அந்தாதி பதிற்றுப்பத் தினிதுரைத்தா னிதன்பெருமை
யரைதற் பாற்றே.

பேரையூர் வித்துவான்
சண்முகஞ் செட்டியாரவர்கள் சொல்லியது.

மருக்கம்பூத் தருக்குலவுந் திருப்பரங்குன் றத்தில்வளர்
மயிலோ னென்னும்
திருக்குமரன் மேற்பதிற்றுப் பத்தெனுமந் தாதிசெழுந்
தமிழாற் செய்தான்
அருக்கனெழு புரவிவிடா யகற்றுபொழிற்
பார்த்திபனூ ரதனிற் றோன்றும்
தருக்காசண் முகவலவ னெனும்வசிய குலதிலகத்
தமிழ்ச்சிம் மேறே.

பசுமலை அமெரிக்கன் மிஷன் உயர்தர கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
நெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் இயற்றியவை.

பூமகள் வதன மெனுந்தமிழ் மொழியே
புனிதமா மென்பதை யுலகில்
பாமகள் வடிவப் புலவரு மரனும்
பாண்டிய மன்னவர் தாமும்

கோமக னுகஞ் செவ்விய வேளுங்
குறித்தறிந் தாய்ந்திடக் குழுமும்
மாமகத் துவஞ்சேர் பதியெனப் பொலியும்
மதுரையில் வாழுறுங் கனவான். (1)

மன்னரும் போற்றும் வைசிய குலத்தின்
மணியென வந்தவன் மலராள்
இன்னரு ளாலே இருநிதி யெய்தி
இலகுமென் றேழூரில் ஒருவன்
பன்னரும் புகழ்சேர் மதுரைமா நகரின்
பாலன சபையினிற் பலர்க்கும்
நன்னய மொழியால் முன்னின வளிப்போன்
நாடோறுங் குகன்பதம் பணிவோன். (2)

அங்கயற் கண்ணி கோயிலின் தரும
அவையினற் றிலகமாத் திகழ்வோன்
மங்கலில் வெள்ளி யம்பலத் தறங்கள்
மாண்புற வளர்த்திடும் வள்ளல்
மங்குறோய் மாட மதுரையம் போர்டில்
மருவினர் தங்களி லொருவன்
இங்குயர் நல்லோர் நண்பினன் பொல்லார்
இனத்தினைக் கடிந்திடும் உரவோன். (3)

இந்தநற் குணத்தின் சண்முகப் பெயரோன்
எழின்மயில் ஊர்தியில் இலகுங்
கந்தனைத் தொழுது பாங்கிரிப் பதிற்றுப்
பத்தெனுங் கணக்கினந் தாதிச்
சந்தநற் பாவாம் மாலையைக் கோத்தச்
சண்முக வேளினுக் கணிந்தான்
செந்தமிழ்ப் புலவ னுமிவன் பன்னூல்
சிறக்கநன் கியற்றிவா ழியவே. (4)

உ

முருகன் துணை.

திருப்பரங்கிரிப் பதிற்றுப்பத்தந்தாதி.

காப்பு.

பத்தர்க் கெளியன் பரங்கிரிவா ழாறுமுகத்
தத்தன் பதிற்றுப்பத் தந்தாதி—சித்தியுற
வானை முகத்தாளு மையன் மகிழ்சேயே
ஆனை முகத்தா யருள்.

நூல்.

திருமேவு மார்பனொரு கலைவாணி நாவனொடு
திகழும் வானோர்
மருமேவு கொன்றையணி சடையானை வாழ்த்தவருள்
வடிவாய் வந்து
பொருமேவி வென்றுதழை பொழிலார்ப ரன்குன்று
பொலியத் தேவ
தருமேவு செல்வனுவந் தருள்மாது சாரமணந்
தணைவாய் போற்றி. (1)

போற்றிதிருத் தாளிணையே பொற்புறுமூ விருமுகங்கள்
புனித மேனி
போற்றிதிரு நாட்டமுன்னூன் கவைபொழிநற் கருணையொடு
புணையும் வேலே
போற்றிதிருப் போகிதந்தபொன் னிழையை மணந்தின்பம்
பொழியுங் குன்றே
போற்றிதிருச் சண்முகனே பொய்கைவளர் தற்பரனே
புனித வேளே. (2)

வேளையே சத்தியெனும் வேற்காத்தே வின்னருளே
விழையா துங்கள்
நாளையே போக்கியிவ ணயந்துவக்கு நானிலத்தீர்
நலனே சூழும்
வாளையேய் சாலிவயல் சூழ்ந்தபாங் குன்றமரும்
வடிவேற் கந்தன்
தாளையே வாழ்த்தியிரு மைக்குதவும் பேறடைவீர்
தாணி யீண்டே. (3)

ஈட்டுபொரு ளேதேனு மெவ்வகையா நல்லறத்தே
ஈயா தென்றும்
கூட்டுபொருள் வைத்திழக்குங் கொள்கையுடைத் தேனீநேர்
குவல யத்தீர்
மாட்டுளுயர் சண்முகனு மத்தனருள் பெறவாழ்த்தும்
மகிதலத் தாம்
கோட்டுளுயர் காற்புடையுங் கோங்கலரும் பாங்கிரிவாழ்
குகனை நீரே. (4)

நீரின்மேற் குமிழியெனு நிலையில்பூ வாழ்க்கையதி
னின்றே நச்சிப்
பாரின்மேற் கொடுவினைகள் பலவாகக் கொண்டுழலும்
பவத்தே முய்யப்
போரின்மேற் சென்றுபுத்தே ளுலகளித்த கந்தகிரிப்
புகழோன் செய்ய
ஏரின்மேற் செல்லுபா னீன்றருளுஞ் சண்முகனை
யேத்து வாமே. (5)

வாராருங் கூந்தலுடைத் தனமாதர் வலைசிக்கி
வாழ்வே னாளும்
சீராருஞ் செல்வாவுன் றிருவருளிற் கிலக்காயான்
சிறந்து வாழக்
காராரும் பரங்குன்றக் கண்ணுதலா னற்சேயே
கனிந்து தீயின்
நேராரும் பஞ்செனவே யென்வினைக டீர்த்தருள்வாய்
நிமலா வின்றே. (6)

இன்றிருக்கு நாளையிரா தென்றுமிந்த வாழ்க்கையினை
யேற்றே மற்றும்
நன்றிதுவா மெனப்புகழ்ந்து நசையாழி வீழ்ந்துழலு
நவையேன் பெற்ற
பொன்றுதனென் வயத்தாகும் போதேநற் போதமருள்
புனிதன் வாழும்
குன்றிலுயர் பரங்கிரியான் சென்றடைவேன் குறைதணிப்பேன்
குகனை வாழ்த்தி. (7)

வாழ்த்தெனவே நாவளித்தாய் வணங்கெனவே சிரமளித்தாய்
வாழ்த்தி யேத்தித்
தாழ்த்தெனவே காமளித்தா யண்டமுறுங் கறங்கெனவே
சார்ந்து லாவும்
பாழ்த்தகைய நெஞ்சடக்கும் பான்மையளித் தாயில்லை
பாவெற் பாளுங்
காழ்த்தடவம் மார்பினல்லோய் கனிந்தருளுன் கழற்றுளே
கருதிப் புக்கேன். (8)

புண்ணியனே பரங்குன்றம் பொலியவரு கண்ணியனே
புனித வேள்வி
பண்ணியறி யேன்சிறிதும் பாழுமனக் குரங்கதுதான்
பற்ற வீண்டே
எண்ணறுதீ வினையிழைத்தே னென்செய்வே னெளியேனிங்
கெவ்வா றுய்வேன்
தண்ணளியே சுரந்தடியேன் மடநெஞ்சின் றுகளகலத்
தடுத்தாட் கொள்வாய். (9)

கொண்டுமறை தினந்துதிக்கு நின்னடியார் கூடுதிருக்
கோயி னண்ணேன்
உண்டுடுத்தி யுறங்கிமறை யுரையொன்றுங் கற்றிவணே
யுணரு கில்லேன்
பண்டுவினைக் கொடியேற்கு நின்னருளே பாலியெனப்
பரிந்து வந்தேன்
மண்டுபுனற் பரங்குன்ற மமர்ந்தசுரர் குஞ்சரியை
மணக்க வந்தோய். (10)

வேறு.

வந்தநாள் முதலா யன்பர் வயின்பல வரங்க ணல்குஞ்
சந்தமார் பரங்குன் றுளுஞ் சண்முகத் தேவே யென்றன்
சிந்தையை நின்பா லுய்த்துத் திருவருட் பேறே வேட்டேன்
எந்தையே யெளிய னானு மின்னருள் பெறவே ஈயாய். (11)

ஈத்துவக் கின்ப மில்லா விருநிதி யுடையார் போல
மாத்தவஞ் சிறிது மின்றி மானுட வாழ்க்கை யானும்
தீத்தொழில் பலவே கொண்டேன் றினங்களும் வீணேசென்ற
காத்தருள் பரங்குன் றுளுங் கந்தனே களிக்க யானே. (12)

யானென தென்னும் பாச மிகுந்தொழு கவனி நீதேதோர்
தேனெனச் சூக்கு முன்றன் தெள்ளிய வருளுக் காக
நானெனச் செறிந்தே யோங்குன் கடிமலர்க் கழலே போற்ற
வானிமிர் பராச லத்தே வயங்குசண் முகனே காவாய். (13)

காவெனக் கதறு வேற்குக் கனிந்தருள் புரியா யாகில்
வாவென வழைத்தே யோம்ப மண்ணிலார் நின்னை யல்லால்
ஆவதைப் பிரிந்த கன்று மாவையே நோக்கு மல்லால்
மேவவே றிடனு முண்டோ மிலைந்தருள் பரங்குன் றத்தா. (14)

அத்தநின் னருளை யானு மடைந்திட லவனி தன்னில்
எத்தனிப் பேறு வேண்டு மெனக்கெவ ரிணையே யாவர்
முத்திநல் லின்பம் வேட்டு முனிவர் நாளும் வந்து
சித்தற வாழ்த்தி யேத்துந் திருப்பரங் குன்றத் தேவே. (15)

தேவனே யமரர் கோனே திருப்பரங் குன்று ளானே
ஆவியே யறிவே யன்பே யையநின் மலனே யாயே
பாவியேன் நின்னை யல்லாற் பிறிதொரு பற்று மில்லேன்
மேவினேன் புகுந்தே னின்றன் விரைமலர்த் தாளே தஞ்சம். (16)

தஞ்சனே புவன மேத்துஞ் சரவண பவனே தீய
நெஞ்சனே னெளியே னாயே னெறியிலே னறியேன் கள்ள
வஞ்சனே னென்றே வாளா மகிழ்ந்திலாய் மலையாள் பெற்ற
மஞ்சனே பரங்குன் றுளும் வாசவன் மங்கை மன்னா. (17)

மங்கையோர் பாகன் மைந்த மதியிலி யானே னெற்குப்
பங்கயன் றருநா ளெல்லாம் பாழுற வின்ன மிழ்தம்
அங்கணத் துகுத்தா லென்ன வாற்றவும் வாளாவுய்த்தேன்
சங்கமார் பரங்குன் றுளுஞ் சண்முகத் தேவே சாராய். (18)

சாத்திர மனைத்து மாய்ந்தே சவியுறத் தெளிந்த ஞான
நேத்திர முடைய நீத்தோர் நித்தமும் பரவு நின்றாள்
காத்திர மெய்ய னாய கசடனே கதுவ வல்லேன்
தோத்திர மாலை வேய்ந்தே பரசலத் தோங்கு மன்னா. (19)

மன்னுயி ரளித்துக் காத்து மருவிடு மிடுக்கண் டீர்க்க
மின்னொளி பரங்குன் றத்தில் மேவியே சிறக்க வாழும்
மன்னவ நின்னை யல்லால் மற்றொரு தேவை நாடேன்
அன்னவா றருளி நீயு மடியனை யாண்டு கொள்ளே. (20)

வேறு.

ஆராரு வந்து னாத செல்வ வடியே துதிக்கி னவர்தாம்
பேராத வின்ப வாழ்வேபு னைந்து பெறவீட ளிக்கும் பெரியோய்
ஓராது நின்னை இதுநாள வத்தி லுழல்வேனை நாடி மகிழ்வாய்
நேராக வந்து புரிவாய்க டாட்ச நிதியேப ரங்குன் றருவே. (21)

அருவாகி யெங்கு முருவாகி யெண்ணி லகிலாண்ட சீவ ருறவாய்
மருவாகி நல்ல மலராகு நின்னை மதிஞான மீயு மறைநூல்
பொருளேது மில்ல னுணையா னறிந்து புகழ்கின்ற வாறுமறியேன்
தெருளேவி ழைந்து வருவார்ப ணிந்து தினமேவு கந்த கிரியாய்(22)

கிரியாமெய்ஞ் ஞான விருசத்தி மாதர் கேள்வாசு கந்த கிரியாய்
வரையேக டந்த மிகுபாவி யானு மறனன்றி வேறு புரியேன்
விரைமாலை சூடு குழன்மாதர் மீது மிகவாசை கொண்டு மெலிவேன்
புரையே துடைக்க நினையே யலாது புகல்வேறி யானுமறியேன்(23)

அறியேனி ழைத்த பிழையேபொ றுத்து னருளேசுரப்பையறநூல்
நெறியே கடந்து நெடுஞால மிங்கு நினையேம றந்து புலனும்
வெறியேகு விந்திங் கெனைமூழ்கு விக்க வெளியே னயர்ந்தன்மிகவே
மறியேத டிந்து செயமேவி வந்த வளர்கந்த வெற்பி னிறையே.(24)

இறையேனுங் கல்வியறிவே யிலாத
　　வெளியேனுங்கொண்ட மடனும்
குறையேத டிந்து கொடியேனை யாள்வை
　　குன்றுகுகாமுன் வணிகர்
உறையேவ ளர்ந்து தமிழ்வாணர் மூவ
　　ருறுமாதவத்தி னுருவே
கறையேறு கண்டர் நுதலேபு கண்ணின்
　　கனலேயுதித்த கனியே. (25)

கனிகாய்க டின்று வெயின்மாரி கண்டு கனனீரு றைந்தைம் புலனீர்
நனிமாத வத்த னடியார்க டம்மி னாயேனு மாவ னலனோ
வனவேட ராச னொருமாது வள்ளி மணவாள கந்த மலையாய்
இனியாவ துன்ற னடியார்கு ழாத்து ளிசைபே றெனக்கு மளியாய்.

அளியே சுரந்து சொரிநான்ம ருங்கி லளியேறு கந்த கிரியாய்
அளியேறு மேனி யரன்மைந்த நின்ற னளியேதுகொண்ட வீரா
றொளியே நிறைந்தகருவேற்கனொன் றினொளியேயளிக்கி னுயர்வா
னொளியேய டைந்த விருளாகு மென்ற னுளமச னைத்து மினிதே.

இனியாவதுன்றனருளேவழங்கியெனையாள்கவேற்கையெழிலோய்
அனியாய மாக விதுபோதெ னாளு மவமே கழிந்த பலநாள்
நனிமாத வங்கொள் பயனூற வுன்னி நசையோ டடைந்த னுனையே
பனியாரு கந்த தனிவெற்பு மேவு பரன்கண்ணில் வந்த முருகா. (28)

முருகே யொழுக்க வருகே கிடக்கு
　　மொலிவண்டு மொய்த்த பொழினேர்
முருகேயுன் செய்ய வருளாமின் றேனை
　　முனமோடி மொய்க்கு மடியார்
முருகேத னக்கிங் கொருபே றெனக்கொள்
　　முதுகந்த வெற்பின் முனம்வாழ்
முருகேயெ னக்கு மொருநீ யளிக்கி
　　லுனையார் தடுப்ப ருறவோய். (29)

உறவேது மின்று னிருதாள் களன்றி யுயர்கந்தவெற்பி லுறைவோய்
அறமேது குன்றி யளவேனு மின்றி யறியேனும் வாழ்ந்த னவமே

மறையேபு கன்ற வறநூல்க டந்த மதிஞான மெர்கு மருள்வாய்
குறையேயி ரந்த தமிழ்வாணர் மூவர் கொள்ஞான மீன்ற குருவே. ()

வேறு.

குருவென முன்பு தாமொரு வற்காக்
குருந்தடி யமர்சிவக் கொழுந்தாம்
ஒருமுதற் றந்தை யுறவரு கமர்ந்தே
யுயர்பிர ணவப்பொரு ளுரைத்த
அருமறை நாவா லஞ்சலென் றோர்சொல்
அறைந்தப யாத்தமே யளியாய்
பருமுழைக் கீரற் குறுபய மொழித்த
பரங்கிரிச் சரவண பவனே. (31)

பவமெனுங் கடலிற் படருவெங் கொடியாம்
பவமெனைப் பற்றப்பின் பற்றிக்
கவிகுடைப் பின்செ லதனிழ லென்னக்
கடுநிர யத்ததற் காளாய்த்
தவமிலி யானு மவம்பல விழைத்தேன்
தஞ்சமுன் னிருகழற் றுளே
நவமணி யொளிக்கு முயரொளி விளக்கு
நளிர்பரங் கிரியமர் நாதா. (32)

நாகம்சேர் மனனு மூசலைப் பற்றி
நானிலந் தனில் விழை யவமாம்
நாகம்நே ருறவிற் கிடந்துமிக் குழன்றே
நானதைக் களைவண மறியேன்
நாகம்நே ரோங்கு கிரவுஞ்ச கிரியை
நாமவேற் படையதாற் றடிந்தோய்
நாகம்வாழ் சுவேத நாகமீ தேவ
நாகமார் பரங்கிரி யமர்வோய். (33)

அமரராம் பயிரை யணுகுவெங் களையாம்
அவுணரின் றனிமுதற் சூரன்
தமருட னவனு மடியவே வெற்பைத்
தகர்த்தவா விட்டவேற் கையோய்

எமனுறு நாளா வெற்குறு வானை
யானடை முன்னமா தரியாய்
சமனெனச் சருவ சீவகோடிக்கும்
தருவாம் பொழிபார சலனே. (34)

சலமுதற் சியே பலவினை சடமாம்
தனுவதே நிலையெனச் சார்ந்து
புலனெனுங் கள்வ ரைவரே புகுத்தப்
புகுமவர் வழிச்செலும் புல்லேன்
மலமொரு மூன்று மகன்றுமே யுன்றன்
மலரிணைத் திருவடி மருவும்
புலனெனக் கருள்வாய் வரம்பல பெருகிப்
பொழிபரங் கிரியமர் புனிதா. (35)

புனிதநீ வேதப் பொருளுநீ யென்னப்
புந்தியி லிருத்தியே யுள்ளக்
கனிவொடு வாழ்த்தி நின்னருள் பெறுவார்
கணக்கிலர் கண்டியா னிங்ஙன்
பனிபலவாகக் கொண்டுமிக் குழன்றே
பதுமநின் பாதமே பணிந்தேன்
இனியெனக் கருள்வாய் பரங்கிரி வாழும்
எந்தையே நின்னரு ளினிதே. (36)

தேனினு மினிய செந்தமிழ்க் கவிகள்
செப்புமெய்ப் புலவரே போலக்
கானமென் மயிலி னுடல்வான் கோழி
கண்டுட னுடுமத் தகையே
பானலஞ் சூழற் பரங்கிரித் தேவே
பரிந்திவ னின்புகழ் பாட
நானினைந் துற்றே னியதை யேற்று
நல்லருட் டுணையதை நல்கே. (37)

நளினவிண் கயிலை யருகமர் கந்த
நற்கிரி யதுதுறந் திவணே
தெளிதமிழ்க் கூடற் குடவயிற் பொலியுந்
திருப்பரங் குன்றுநீ சேர்ந்த
தொளிமணிக் கழலே போற்றுமுன் னடியார்க்
குவந்தருள் புரிபொருட் டென்னில்
எளியனு னவரி லொருவனே யன்றோ
யெற்கெவ ருனையலா துளரே. (38)

உளமெனுங் கூடத் தூக்கமா மறிவே
யுகுத்துனைப் புகழ்ந்திடேன் மாயைக்
குளமதி னீந்தி நாளுமே பந்தக்
கொடுபவப் பிணிவினை யாளேன்
வளமிகுஞ் செல்வத் திருப்பரங் கிரிவாழ்
வள்ளலே வழங்குமுன் னருளாம்
அளவிலா னந்த வமுதமே கிட்ட
வடைந்தியா னுய்யுநா ளெதுவே. (39)

வேதமெய்ப் பொருளா மாறெழுத் தகனே
விளங்கிடும் பூதலஞ் செய்த
மாதவத் துருவாந் திருப்பரங் கிரியுன்
மந்திரஞ் சென்றுள மகிழ்ந்தேன்
ஆதவர்கோடி யருஞ்சுடர் மணியா
யவிருனைக் கண்டிட வென்றன்
கோதுக ளொழிந்த மனத்திடை வேறு
கொண்டியான் பரிவதும் கொள்ளேன். (40)

வேறு.

கொன்றை யஞ்சடை மாமுதற் கோமகன்
மன்ற லம்பொழிற் சீகந்த மாமலை
சென்ற டைந்துதி னம்வலஞ் சேர்வமேற்
குன்ற வுட்டுக டுய்மையுட் கொள்ளுமே. (41)

கொள்ளு வோரெதைக் கொள்ளினுங் குன்றிடா
வள்ள னீயென வந்துனை வாழ்த்தெனை
எள்ள லாகுமோ வேற்றெனைக் காத்தருள்
வெள்ள மேபொழி மெய்ப்பரங் குன்றனே. (42)

குன்று தோறுவங் தாடிடும் கொற்றவ
இன்று காவெளி யேனிழை யேதமே
ஒன்று நீதிரு வுள்ளங்கொ ளாதருள்
மன்று சேர்பரங் குன்றுறை மைந்தனே. (43)

மைந்த ரேபல வன்பிழை யாற்றினும்
தந்தை தாயவர்த் தள்ளுத னீதியோ
இந்து லாவுல கேழினு மின்னுயிர்
தந்து காபரங் குன்றுறை தந்தையே. (44)

தந்தை தாய்விடி லுன்கழல் சாருவேன்
எந்தை நீவிடில் யாரிட மேகுவேன்
சிந்தை நின்வயிற் சேர்த்தனன் நேர்ந்தருள்
கந்த மாமலைக் கண்ணுறை கந்தனே. (45)

கந்த வார்குழற் கன்னிய ராடற்கு
வந்து நீயவ னுற்றதன் மாண்பினல்
வந்து யானுனை வாழ்த்துரை கேட்டிலை
சிந்து வாய்பரங் குன்றுறை செல்வனே. (46)

செல்வ மாதவச் சீரடி யார்குழாம்
மல்க வாழ்த்திடு மாண்புறு மோசையால்
புல்ல னென்னுரை போற்றிலை போதுமே
வல்லை யாள்பரங் குன்றுறை மன்னனே. (47)

மன்னு காதனின் மாணடிக் கல்லனேல்
அன்ன வாறெனை யாக்கிட வல்லைநீ
உன்னை யேபணி வோர்க்கரு ளோம்புவாய்
கன்ன லேய்பொழிற் கந்தவெற் பாளனே. (48)

ஆள நீதகு மண்ணலென் றேதிருத்
தாள டைந்தனன் தள்ளுத னீதமோ
நாள டங்குமு னல்லரு ணல்குவாய்
தாள மேப்பரங் குன்றவுன் தஞ்சமே. (49)

O-112 MSCl,T
N23

தஞ்ச மேவியுன் றண்மலர் சார்ந்திடார்
வஞ்சக் கூற்றுவன் வந்திடி லென்செய்வார்
மஞ்சு தோய்பரங் குன்றுறை வள்ளலே
கஞ்ச மாமலர்ப் பன்னிரு கண்ணனே. (50)

வேறு.

கண்ண னற்ற வத்து தித்த கன்னி யீதங் காந்தவன
கண்ண னென்ற னுள்ள நின்க ழற்க ணின்று வக்குமவ்
வண்ண மிங்கெ னக்க ருள்வ ழங்கு வாய்ப ரங்கிரி
வண்ண மன்றுள் வாழு பத்தர் வத்ச லாவ ரோதயா. (51)

85777

வாத னாயி ருந்தெ ணில்வ ரங்க ளீயு நின்னருட்
பெருகு வாரி கண்டி யானும் பித்த னாயி னேனதிற்
காக நீய ளித்தி டிற்க ளிப்பன் யானுங் ககனமா
சுரர்பு கழ்சு கந்த மார்சு கந்த வெற்பின் சோதியே. (52)

சோதி யாம லென்னை நீயுன் றொண்ட ரோடி ருத்திநல்
நீதி யார ணங்க ளோது நேர்மை தந்து நீள்வினைக்
கோதி கந்து நின்ன ருள்கொ ளுந்தி றத்தை யூட்டுவாய்
ஆதி யால வாய்ம ருங்க மர்ப ராச லத்தனே. (53)

அத்த னின்ன ருட்டு ணைக்க டைக்க லங்கொள் வேனெனை
சித்த நீகொ ளாதி ருப்ப தேவ னேதெ ரிகிலேன்
அத்த மொன்றெ னக்க ளித்த ழைக்க யானு மல்லனோ
சித்த ராதி பத்த ரேய்சிக் கந்த வெற்பின் றேவனே. (54)

தேவ ரிற்சி றந்த நேமி தேவன் றன்னல் மருகனே
கோவ திற்சி றந்த போகி கொண்ட தேவ யானையாம்
பாவை யிற்சி றந்த பாவை பங்கு வாழ்ப ராசலா
யாவை யிற்சி றந்தி லங்கு நீய லாதெற் கேவரே. (55)

ஏவ லேனு மேற்ப வர்க்கி ரங்கு பத்த ரெளியனே
ஆவ லல்ல ருண்டு நின்ன டிக்கென் றச்சொ லறிகிலேன்
பாவ லர்கள் பாம ரர்கள் பணிந்து வாழ் பரங்கிரிச்
சேவ லங்கொ டித்தி ருத்த லத்து வாழுஞ் சேந்தனே. (56)

சேந்த வம்மு கங்க ளைந்து ளானு தற்க ணின்றுமே
போந்த வெங்க னற்க ணையு தித்து வந்த போதனே
நீந்த விப்பி றப்பி னின்று நீள்க ழற்பு ணையருள்
வேந்து கோடி யெல்லி னென்ன விளங்கு கந்த வெற்பனே. (57)

வெற்பு தோறு வந்து வேடர் விழவி னூடும் வேலனே
முற்ப வத்தி னாழ்ப்ப யன்கள் மோத வென்ற னுள்ளமே
வற்பு றுத்த வுன்னை யிங்கு வணங்கி நாளு மேகுவேற்
கற்ப கின்ன ருட்பொருள் வழங்கு கந்த வசலனே. (58)

அண்ட முன்கி டக்க முன்ன மார்ந்த புண்ம றைந்தபோற்
பண்டு டம்பி ருக்க விங்கு பாவி யந்த கன்மரீஇ
கொண்டி னுவி போகு முன்னங் கூடி யென்னை யாண்டருள்
வண்டு லாவு பூந்த டங்கள் வாய்ந்த கந்த மலையனே. (59)

மின்னின் ஞால மின்னின் வாழ்வை மதித்து நாளும் நிலையென
உன்னி யுன்னி யிங்கு மங்கு முழலு நெஞ்சை யொடுக்கிநின்
பொன்னி சைக்க ழல்ப ணிந்து போதம் நின்ன ருள்வயின்
துன்னு மாறு நல்கு கந்த தூய்வ ரைச்சி வன்சுதா. (60)

வேறு.

சிவபெருமா னுதற்கண்வரு சேய்க்கு கந்த
திருப்படைவீ டாறவற்றுட் சிறப்புஞ் சீருஞ்
சவியுறவா னிமிர்ந்தோங்கு பரங்குன் றத்துச்
சண்முகத்தான் றிருவடியைச் சார்ந்து நாளும்
பவளமுறழ் செவ்வாயும் படிக மேனிப்
பணிமார்பும் துணைவேலும் பணிந்து பாடி.
அவனருளா மின்னமுதை யடைவா யாகி
லரும்பொருளொன் றுனக்கில்லை யறிவாய் நெஞ்சே. (61)

நெஞ்சேயிங் கியானென்று நிகழ்த்தக் கேணீ
நித்தியமு மிகவாழ்வே நிலையென் றெண்ணி
எஞ்சாத மயக்கமொடு சினமே காமம்
எனுமொருமுக் குறும்பாற்றி யிடரு ழுமல்
அஞ்சேலென் றொருகோற் கருகின் மேவி
யவனோடா யிரத்தவரை யாண்டு கொண்ட
மஞ்சாடும் பரங்குன்ற மன்றுள் வாழும்
மாதுமையாள் குமரனடி வணங்கு வாயே. (62)

வாக்குமனங் காயமென வழுத்து மூன்று
வகைக்காணம் நற்கருமம் வரிக்கா தென்றும்
தீக்குணத்தா ரொடுபழகித் தீய சொல்லுஞ்
சிறுநினைவும் சிறுதொழிலுந் தினமே நாடி
ஆக்கையுறுஞ் சின்னாளு மவல மாக
வாற்றுமழி புன்னெஞ்சே யணுகி நாளும்
தேக்குமாப் பொழிலாரும் பரங்குன் றத்துச்
சேயருளைத் தினம்பாடித் தேடாய் நீயே. (63)

நீராரு மொக்குளெனு நிலையாக் காயம்
நித்தியமா மெனவுமரைக் கணமும் நில்லாக்
காராரு மின்னெனுமக் காய வாழ்வைக்
கற்பமென வேயுண்மை கழறு நூல்கள்
ஓராது மும்மலமாம் பாச மேவி
யுற்றுழலு மடநெஞ்சே யுவந்து நாளுஞ்
சீராரும் பரங்கிரிவாழ் தேவர் தேவைச்
சிந்திப்பா யவனடியை வந்திப் பாயே. (64)

பாரறிய வெண்ணிலவாம் பத்தர் தங்கள்
பத்தியெனும் வலைக்கண்ணே படிந்து தூண்டிற்
காராருங் கயலெனச்சோ தனைக ளாற்றிக்
கடையிலவர் வயமாகிக் கருணை யூட்டும்
பேருளான் பரங்குன்றம் பிறங்கி வாழ்சுப்
பிரமணிய னடியர்களைப் பெட்போ டாண்ட
சீருமைச் சரிதைபல திகழ்ந்து மென்னோ
சிவணியிடா தவனருளைத் தீய நெஞ்சே. (65)

தீங்கனியங் கரமிருக்கச் செங்காய் நாடித்
திசையெங்கும் போந்திவணே திரிவா ரொக்க
வேங்கையலர்ப் பொன்மாரி விரிந்து பெய்ய
விளங்குபர வெற்பாளும் விடையார் மைந்தன்
ஆங்குகனும் சண்முகனும் அவன்றா னீயு
மாமருளா மின்னமுது மருகின் மேவி
யீங்கிருக்க நீதிரியு மியல்பென் னோவோ
வெளி நெஞ்சே யவனருளை யேத்திக் காணே. (66)

காற்றுடி யலைசகடக் காலே பூசற்
கனற்கொள்ளி வட்டமாக் கடுவ னென்னச்
சாற்றிவைக ணிலவுமொரு நிலையில் லாத
தன்மையதாம் பிறவியெனுஞ் சாக ரத்தை
யற்றுறு குணப்புயலி னின்று நீந்தல்
இறைவனடி யார்க்கேமிக் கெளிதென் றோத
ஆற்றுதம் முறையென்ன வவல நெஞ்சே
ஐயனுறும் பரங்கிரியை யடைவா யின்னே. (67)

இனியகனி மரமிருக்க விரைந்தே புக்காங்
கில்வழிமீண் டோடும்புள் ளினத்தை யொப்பத்
தனியுறுமவ் வாகூழாற் றழுவி நெஞ்சே
தானேகு மூழதுதான் சார நீங்கி
நனிசுழல்தே ருருளையென நாளு மோடும்
நன்னிலையில் லாப்பொருளே நாளும் நச்சிற்
குனிவேலான் பரங்குன்றக் குமரன் நாடிக்
கொளற்கரிதா மவனருளைக் கொள்வ தென்றே. (68)

என்றுலகக் காட்சியெலாங் கனவின் காட்சி
யெனச்சுருதி யுத்தியனு பவத்தாற் றேர்ந்து
வன்றுயரு மதிகளிப்பு மொன்றாய்ப் பத்தி
வைராக்ய நெறியிறையும் வழுவா தாற்றி
ஒன்றுபொறி யைந்தடக்கி யவத்தை மூன்றி
லொருவியவன் தானென்றே யுணர்கிற் பாயேல்
அன்றுனக்குப் பரங்கிரிவா ழானோர் மைந்தன்
அருள்வாய்த்த தெனநெஞ்சே யறிதி மன்னோ. (69)

மதிகயல்வில் துப்பார மரவு செப்பு
　　மஞ்சுகம லங்கொடிதேன் மஞ்ஞை யாகும்
வதிமுகங்க ணுதலிதழ்ப லல்குற் கொங்கை
　　மலர்க்குழடா ளிடையுரையோ டாட லென்னத்
துதிபலவாப் புகழ்ந்தேத்தித் தோகை யார்தம்
　　சுழிகாமப் பவக்கடலே தோய்ந்து தோய்ந்து
கதிநான்குட் சகடெனவே சுழலா தின்னன்
　　சந்தகிரி யானடியைக் கருதாய் நெஞ்சே. (70)

வேறு.

சேவற் கொடியுந் திகழுமயில் வாகனமும்
மேவப் புடைமாதர் வீற்றிருக்கும் நின்கோலம்
சேவித் தழைக்கச் சிறியேனென் முன்வருவாய்
சாவித் தடஞ்சூழுங் கந்தகிரி வேலவனே. (71)

வேழமது வுண்ட விளாங்கனியாம் வெள்ளறிவேன்
ஏழைமையை நீக்கி யெளியேனை யாண்டருள்வாய்
தாழையெனச் சாலியினை தண்பரங்குன் றுறுமுக
வாழியிசைக் கண்வளரு மச்சுதனார் நன்மருகா. (72)

நன்கவிஞ ருகவெழு நாவளித்து நாடோறும்
உன்கழலே யோது முரனளிப்பா யோங்குதமிழ்
மன்னு மகத்தியர்க்கு மாண்புடனே வண்டமிழை
முன்னருளுங் கந்தகிரி மூவா முதற்பொருளே. (73)

பொருள்வேட்டுப் பூவேட்டுப் பொன்னிழையார் தங்காம
மருள்வேட்டு நாளும் மனவலிதான் கெட்டயர்வேன்
அருள்வேட்டுன் சந்நிதிவா யண்ணிவந்தே னென்றடைவேன்
தெருள்வேட்டார்க் கீயுந் திருப்பரங்குன் றத்தரசே. (74)

சேலாருந் தண்வயல்சூழ் சீகந்த மாமலைவாழ்
வேலாரும் பன்னிருகை மெய்ஞ்ஞான பண்டிதனைப்
போலாரிப் பூமிசையே போதமதை யூட்டவல்லார்
பூலோகத் தீரேநீர் போயடைவீர் புண்ணியனே. (75)

புண்ணியவான் சேத்திரங்கள் போயுறைந்தும் பூதலத்தில்
எண்ணிலவான் றீர்த்தங்க ளேகிடினு மென்பயனும்
கண்ணாகன் ஞா லம்போற்றக் கந்தகிரி தன்னிலுறை
அண்ணலருள் வாய்க்கி லடைந்திடலாம் பேறனைத்தும். (76)

பேறுகு முன்னருளின் பெட்புடனே நாளுமுனை
மாறாத நேயத்தே வாழ்த்திடுமா யென்றன்னை
வீறாக நீயருளில் வேண்டாமென் றார்தடுப்பார்
வேறருள் ளார்கந்த வெற்பாளு மெங்கோவே. (77)

கோவானு யிண்டோர் குருவானு யீசற்குந்
தேவானைப் மாலயற்குஞ் செப்பவொண்ணு வுன்னெழிலோர்
நாவானு யேனும் நவிலுந்த ரத்ததுவோ
காவானுற் காத்தருளுங் கந்தகிரிக் கண்மணியே. (78)

கண்மணியே யென்றன் கருமணியே யக்கருவி
னுண்மணியே பாங்குன் றுறுமணியே யோதுலகை
ஒண்மணியும் வானெளிபோ லூட்டியரு ளோம்புமுயர்
தெண்மணியே காப்பாய்நின் சீரடியே தஞ்சமுற்றேன். (79)

தஞ்சமுமே யானடைந்துந் தண்ணருளே நீசார்ந்து
கொஞ்சமுமே பாலன்மிசை கொண்டளியா தேயிருத்தல்
வஞ்சகமோ பேருளாம் வாரியதி லோர்திவலை
பஞ்சமதோ சொல்வாய் பரங்கிரிவாழ் பைம்பானே. (80)

வேறு.

பரங்குன்றனை யகங்கொண்டனு தினமுஞ்செபம் பயில்வீர்
உரங்குன்றிட வடுவெம்மட னுயரும்மறி வகமே
பரங்குன்றிட மனமும்மறப் பற்றேயுற வொன்றூர்
சிரங்குன்றிட நினையும்பொருள் செயமேயடை வீரே. (81)

செயலேதுமி லாதைம்புலன் செற்றுன்வயம் வரவும்
மயலேமுதல் வினைதேடிய மலமாந்தளை யறவும்
வியலேயுறு பரங்குன்றுறு வேயேபுரை பன்னீர்
புயனேயருள் செயும்நீயலை போக்கற்றிரு மனமே. (82)

மனவஞ்சகர் புலைநெஞ்சினர் மதுவுண்பவர் வரைவின்
தனவஞ்சியர் கவராடுவர் தருபொய்யின ரிவர்தம்
இனமஞ்சிடு மெளியேனிவர் புறமேயிரு வகையே
தினமஞ்சலி புரிவேனருள் செய்வாய்பராங் கிரியாய். (83)

செய்யேனொரு தொண்டும்மிரு செந்தாமரை யடிக்கே
பொய்யேன்பல சொன்மாலைகள் புனைந்தேனல னிங்ஙன்
உய்யேனொரு கண்ணேமலர்ந் தோம்பாவிடி னாயேன்
மெய்யேதவழ் பரங்குன்றுறை மயிலேறிடு வேலோய். (84)

வேலேவிளங் குகையான்பர வெற்பானடி புக்கே
மாலேகொள வவனாருள் மலிவீரெனிற் காலர்
சூலேவிடு தளையேயுமைத் தொடுமோவுரன் படுமோ
மேலேறிடு வீரேபுவி மீரேயிது மெய்யே. (85)

மெய்யார்பரங் குன்றுவனை வேண்டும்பொரு ளொன்றே
வெய்யேன்பல பிறவிக்கடல் வீழ்ந்தெய்க்கினு மெரிவாய்
உய்யாநர கிடைவீழினு முயர்கற்பக முறினும்
அய்யாவுன தலர்சேவடி மறவாதிரு வன்பே. (86)

பேயென்செயும் பித்தென்செயும் பிறந்தேயுட லுடற்றும்
நோயென்செயும் மற்றும்மினல் தாறுயினு மவைதாம்
போயென்செயும் பரங்குன்றுறை புனிதன்வினை தீர்க்கும்
சேயென்னித யத்தேயுறு செவ்வேளடி யார்க்கே. (87)

அடியாரிழை பிழைகோடியு மறியாதினு மவர்தம்
மிடியாவையும் கொடிவேலையில் விலக்குங் குவிசேவற்
கொடியாபரங் குன்றுமணக் குறையாவையு மொருங்கே
பொடியாம்வகை யடியேனருள் புனையுந்தின மென்றோ. (88)

என்றும்புவி மிசைதானுறு மேழையவர் பங்கே
ஒன்றும்பரங் கிரியாமன வோகையுட னாயேன்
பொன்றும்பொழு தினியாயினும் புகுந்தோர்துணை யஞ்சே
லென்றுன்திரு மறைவாய்மொழிந் திடுவாயுமை மகனே. (89)

மக்கும்புவி வாழ்வும்முயர் வானோருறை பதமும்
தங்கும்மது வேண்டேனொரு தமியேனிரு மையிலும்
எங்கும்புகழ் பரங்குன்றுறை யெந்தாயடி மலரே
தொங்கும்மொரு மணியாம்பதத் துறவே யருள்புரிவாய். (90)

வேறு.

வாட்டும் மனமே பலவகையாம்
வாதை விளைக்க வல்வினையேன்
ஆட்டுங் கறங்குந் திகிரியும்போல்
அல்லும் பகலு மலைந்தெய்த்தேன்
கேட்டுந் தினமே நின்பெருமை
கீழோ னதனாற் கிளரவல்லேன்
ஊட்டுங் கருணைப் பரங்கிரிவாழ்
ஒளியே கவலை யொழிப்பாயோ. (91)

ஓரேன் மற்றே யுனைத்தினமும்
உள்ளங் கசிந்தே யோங்கெரிவாய்
நேரே யுருகு மெழுகெனவே
நேர்ந்தேன் கமுகி னீழ்குலையைக்
காரே யெனக்கண் டாடுமயிற்
கணமார் பொழில்சூழ் பரங்கிரிவாழ்
சீரே யெளியேன் முன்வந்துன்
செந்தா மரைத்தாள் சேர்த்தருளே. (92)

செப்பற் கரிய பரம்பொருளே
சிகியா ரெயில்சூழ் பரங்கிரிவாழ்
ஒப்பிற் குலவா வுத்தமனே
உய்வோர் வகையு முணருகிலா
துப்பிற் குறைமண் பாண்டமதை
யொத்தே நாளு முள்ளழிந்தே
துப்பிற் குறையு மெளியேன்முன்
தோன்றிப் புகன்றோர் துணையருளே. (93)

துன்பப் பெருக்கா மெளியனிடைத்
தோன்றுந் திடனாத தீர்க்கநின
தின்பப் பெருக்கா மருள்வெள்ளம்
என்றோ பொழிவா யெந்தேவா
அன்பற் கருளும் பாங்கிரிவா
ழத்தா வுன்ற னருள்வெள்ள
மென்பக் கலினு மணுகாமை
யேனோ வெளியேற் கிசைந்தருளே. (94)

ஏனோ விரங்கா யின்னமுமே
யிரும்போ கல்லோ வென்னெஞ்சம்
வானோ ரேத்தும் பாங்கிரிவாழ்
வடிவேன் முருகா வன்கல்லும்
தானோ செறும்பாற் றேயுமெனத்
தகைசான் மொழியே பின்பற்றி
நானோ வுன்றுள் நெகிழவொண்ணேன்
நாயே னென்னை நயந்தாள்வாய். (95)

ஆயே யமரா திபதியே
அடியே னிதயக் கமலமுறை
வாயே யுன்ற னருள்பெறுவான்
வந்துன் னடிக்கே கரங்கூப்பிச்
சேயே யென்னை யாளவந்த
தேவே திருப்ப ரங்கிரிவாழ்
வோயே யெனுஞ்சொ னினதுசெவி
யுறைக்கா தேனோ வுரைத்தருளே. (96)

உனக்கோ வடிமை யானல்லா
துலகிற் பலரே யுளரெனினும்
எனக்கோ ருன்னை யொழியவிவ
ணெவரே யுள்ளார் மெய்யடியார்

மனைக்கோ யிலினும் பாங்கிரியாம்
    மலைக்கோ யிலினும் மாநிருவர்
தனக்கோ யிலினும் சார்ந்துறைவோய்
    தமியேன் வினைதீர் தற்பரனே. (97)

தண்டா யுதனே தற்பரனே
    தங்கும் பாங்குன் றத்தாநின்
தண்டா மரையாந் தாளிணையைச்
    சார்ந்துன் கருணைத் தேனருந்தும்
வண்டா யடியேன் மகிழ்ந்துறையும்
    வகைநீ யருளாய் வான்கடப்ப
வண்டா ரணியு மணிமார்பா
    வானோர் சேனை யதிபோனே. (98)

அணியுந் தொடையும் பொருணயமு
    மமையுஞ் சந்தச் சொன்னயமுந்
இணியும் வகையோர் கவிசொல்லுந்
    திறனொன் றில்லாச் சிற்றறிவேன்
மணியும் பதரு மெனக்கோத்தே
    வகுத்துச் சொன்னே னதிற்பதரைத்
துணிபம் மணிகொள் பரங்கிரிவாழ்
    தூண்டா ஞானச் செழுஞ்சுடரே. (99)

85777

செஞ்சொ[illegible]மிழின் றேசிகனைச்
    [illegible]காடியாள் சிமானைக்
அஞ்ச[illegible]பாங்கிரிவாழ்
    க[illegible]னும் வரோதயனை
நெஞ்சக் கோயி[illegible]னைமுள்ளம்
    நெகிழ[illegible]போற்றும் பெரியோரே
தஞ்சக் க[illegible] மலர்ப்பாதம்
    [illegible]ழைத்தும் வாழித் திருவினரே. (100)